முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் இளையான்குடி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

12.11.2018, திங்கட்கிழமை

1. **காக்கும் சக்தியே கந்தவேலே**
**கருணை வடிவான ஞானவேலே**
**ஆக்கமுடன் கலியுகம் காக்க**
**ஆறுமுக அரங்கனாக வந்த அண்ணலே**
2. அண்ணலே உன் பெருமை கூறி
அகிலமதில் ஒளி சூட்சும நூலை
மண்ணுலகில் **விளம்பி துலை திங்கள்**
**மார்க்கமுடன் இருபானாற் திகதி சோம வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 26ம் நாள் 12.11.2018, திங்கட்கிழமை)**
3. வாரமதில் இளையான்குடி நாயனாரும்
வழங்கிடுவேன் உலகோர் நலமுற
சோரமில்லா உலகம் அமைக்க
சுப்பிரமணியர் சக்தியாக வந்தநல்
4. வந்தநல் அரங்க ஞானியரின்
வல்லமை உலகில் கூடவே
சிந்தை தெளிவு மக்களுக்கு
சித்திகளாக மாறி வருமுலகில்
5. வருமுலகில் ஆளுமை திடம்
வள்ளலான தருமநிலை பெருகும்
தருமவான்கள் பெருகி வர
தமிழகம் தன் தேவைகள் தன்னில்
6. தன்னிலே தன்னிறைவு காணும்
தனிப் பெருங் கருணை பெருகி
மன்னன் முதல் மக்கள் எல்லாம்
மாண்பு பெருகி கலியுகத்தில்
7. கலியுகத்தில் ஞானிகள் ஆசியும்
கந்தவேலன் கருணையும் பெற்று
அழிவில்லா பேருலகை படைப்பர்
ஆறுமுகனார் ஞான ஆட்சியும்
8. ஆகவே நிலைகள் மாறி
அறிவிப்பேன் யுகம் மாற்றம்
வகைபட அரங்கன் சேவை வழி
வடிவேலன் நடத்தி அருள்வார்
9. அருள்பட அரங்கன் ஆசிபட
ஆற்றல் கூடி உலக மக்கள்
பொருள் வளமும் சிறந்துமே
புண்ணியத்தை பெருக்கி நன்கு

10. பெருக்கியே கலியுகத்தினிலே
பெரும் பேறு காணுகின்ற
கருத்தான ஞானபலம் அடைவர்
கந்தப்பெருமான் மூலம் சகல வளமும்

11. வளமுடன் பிறவா பேற்றுக்கு
வள்ளலின் வழியும் கண்டு தேறுவர்
வளமுடன் ஞானயுகம் அமைய
வாரீர் ஆறுமுக அரங்கனை நோக்கி ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் இளையான்குடி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கலியுகத்தின் துன்பங்களில் இருந்து இவ்வுலகை மீட்டு காக்கின்ற மகா சக்தியே கந்தவேலனே கருணையே வடிவான ஞானவேலனே ஆக்கமும் ஊக்கமும் பெற்று இக்கலியுகத்தினை காத்திடவே ஆறுமுக அரங்கமகா தேசிகனாக அவதரித்திட்ட அண்ணலே அரங்கா உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 26ம் நாள் 12.11.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே இளையான்குடி நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் இளையான்குடி நாயனார்.

குற்றமற்ற வீண் போகாத உலகினை அமைத்திடவே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அவதரித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியரின் வல்லமைகள் கூடி வருகுதப்பா. அரங்கனின் வல்லமைகள் கூடிட உலக மக்களுக்கு அறிவில் எண்ணத்தில் தெளிவு ஏற்படும். அவர்களது சிந்தை தெளிவு சித்திகளாக மாறி வருங்காலங்களில் உலகினில் ஆட்சியானது திடமான ஆட்சியாக வள்ளல் தன்மை உடையதாக அமைந்து நாட்டினில் தருமத்தின் நிலை உயர்ந்து பெருகிடும்.

தருமவான்கள் பெருகிவர தமிழகமே தனது தேவைகளில் தன்னிறைவைக் காணும். தனிப்பெருங்கருணை நாட்டினில் பெருகி மன்னன் முதல் மக்கள் வரை அனைவரும் மாண்பு பெருகி கலியுகத்தினில் ஞானிகள் ஆசியும் முருகப்பெருமானின் கருணையையும் பெற்று அழிவில்லாத பேருலகை படைத்திடுவார்கள்.

அந்த அழிவில்லாத பேருலகினில் முருகப்பெருமானின் ஞானஆட்சி அமைந்திடும். ஆதலினால் உலகின் நிலைகள் எல்லாம் மாறி யுகமாற்றம்தனை வகைபட ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தொண்டுகள் மூலமாக முருகப்பெருமானே முன்னின்று நடத்தி அருள் செய்திடுவான்.

முருகப்பெருமானின் அருள் பெருகிட ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆசி பெருகி ஆற்றல் பெருகி உலக மக்கள் பொருள் வளமும் சிறந்திடும். மக்களும் புண்ணியத்தை நன்கு பெருக்கி கலியுகத்தின் புண்ணியவான்களாக ஆகி பெரும் பேற்றினை காணுகின்ற கருத்தான ஞானபலத்தினை அடைந்து சிறப்படைவார்கள்.

முருகப்பெருமானின் பேராற்றல் மூலம் உலக மக்களெல்லாம் சகல வளமும் பெற்று பிறவா பெரும் பேற்றுக்கு வள்ளல்பெருமான் வகுத்திட்ட சன்மார்க்க வழியினில் சென்று அவரவரும் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வார்கள்.

வளமுடன் உலகினில் ஞானயுகம் அமைந்திட உடன் விரைந்து வாரீர் உத்தம மகா ஞானி அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை நோக்கி என உலகோர்க்கு அழைப்பு விடுக்கிறார் மகான் இளையான்குடி நாயனார்.

–சுபம்–